Journal of
# Modern Thamizh Research
(A Quarterly International Multilateral Thamizh Journal)

நவீனத் தமிழாய்வு
(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

தொகுதி-9 எண் 2
Vol. 9 No. 2
பங்குனி-ஆனி 2052
April - June 2021
ISSN : 2321 - 984X

**Chief Editor**
Dr. M. Sadik Batcha

**Advisory Editor**
Dr. N. Chandra Segaran

**Editorial Board**
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. Aranga. Pari
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
M. Ramakrishnan
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr.M. Arunachalam
Dr. S. Vignesh Ananth
Dr. Pon. Kathiresan
Dr. S. Bharathi Prakash

## Certificate

சான்றிதழ்

*This is to certify that Dr. / Mr. / Ms.*

கா. ஜான் கென்னடி
முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது).
திருச்சிராப்பள்ளி – 620 002, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது).
திருச்சிராப்பள்ளி – 620 002, தமிழ்நாடு, இந்தியா.

*has Published a paper titled*

Sl.No. 18 | 50 திருத்தொண்டர் காப்பியத்தில் வெளிப்படும் இயற்கை வருணனை
Pages 106-113

Published by
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

Chief Editor
**Dr. M. Sadik Batcha**
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in



Scanned by TapScanner

தொகுதி-9 எண் 2
Vol. 9 No. 2

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*
*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*M. Ramakrishnan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

பங்குனி-ஆனி 2052
April - June 2021

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts a[illegible] Humaniti[illegible]), Language
Literature and Li[illegible]ary [illegible], Tamil
UGC C[illegible] Listed [illegible]p-[illegible] Journal

ரு அச்சு

*Published by*
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**28**

*Scanned by TapScanner*

தொகுதி 9 எண் 2
Vol. 9 No. 2

பங்குனி-ஆனி 2052
April - June 2021

ISSN : 2321 - 984X


| No. | Author(s) | Title | Pages |
|---|---|---|---|
| 1. | க. சீலா | பதிற்றுப்பத்தில் புறப்பொருள் ஆட்சி | 1-5 |
| 2. | இராக. நா.வேல்விழி & அ.சையத் ஜாகீர் ஹசன் | தியாரூ கவிதைகளில் இயற்கை | 6-12 |
| 3. | ZHOU XIN | CHINESE TEXTUAL RESEARCH ON BHODHIDHARMA'S IMAGE | 13-18 |
| 4. | இரா. சற்குணம் | தோழர் நாவல் வழி சமூகச் சிக்கல்களுக்கான பொதுவுடைமைத் தீர்வுகள் | 19-23 |
| 5. | இரா.ஜெயந்தி & இரா. ரம்யாமகேஸ்வரி | சங்ககாலம் முதல் தற்காலம் வரை பெண்கள் | 24-29 |
| 6. | ச. அரியநாச்சியம்மாள் | பொருள்வயற்பிரிவின் வழி தலைவியின் உணர்வுமேலாண்மை | 30-35 |
| 7. | க.கோமதி & இரா.பிரபாகர் | சூளாமணியில் பண்பாட்டுக்கூறுகள் | 36-40 |
| 8. | க. ஸ்ரீமதி | தமிழர் பண்பாட்டு கோலங்களில் விளக்கு வடிவங்கள் | 41-46 |
| 9. | R. CHRISTAL JEEVA | PROMOTING EQUITABLE EDUCATION: UNDER THE REIGN OF KAMARAJ | 47-52 |
| 10. | ப. அருணாதேவி & த. ஜெயலலிதா | அகநானூற்றுக் கருத்துப் புலப்பாட்டில் உவமை | 53-58 |
| 11. | ச.ரம்யா | சேலம் செம்மனூர் நகர செட்டியார் இன மக்களின் வாழ்வியல் சடங்குகள்- இனவரைவியல் ஆய்வு | 59-64 |
| 12. | அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ் | சற்பிரசாத தூதனில் ஹைக்கூ கவிதைகள் | 65-69 |
| 13. | MUZAFFAR AHMAD GANAIE & SAJAD HUSSAIN WANI | CASTE BASED RESERVATION IN INDIA: A CRITICAL APPRAISAL | 70-79 |
| 14. | N. GOMATHI & Dr. A.B. ANGAPPAPILLAI | PRODUCTION CAPABILITY ON PERSONAL LIFE ALONG WITH WORK AMONG SERVICE SECTOR WOMEN | 80-87 |
| 15. | ஜே.கௌரி ஆனந்த் & எஸ். இரவிச்சந்திரன் | சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள் | 88-93 |
| 16. | GURRAM V SNIGDHA RAJ | REPRODUCTIVE CHILD HEALTH SERVICES MAL NUTRITION: A STUDY AMONG WOMEN OF BUDHARAOPET VILLAGE, TELENGANA | 94-99 |
| 17. | S. சசிகலா & இரா.ரம்யாமகேஸ்வரி | ஐங்குறுநூறு தோழிக்கூற்று பாடலில் உளவியல் நோக்கில் மெய்ப்பாட்டியல் | 100-105 |
| 18. | கா. ஜான் கென்னடி & ஆ. ஜோசப் சகாயராஜ் | திருத்தொண்டர் காப்பியத்தில் வெளிப்படும் இயற்கை வருணை.... | 10( |
| 19. | VIKRAM SINGH & SANJIV KR LAVANIYA | FINANCING HIGHER EDUCATION: ANALYSING DISSIMILARITIES IN AVAILABLE SUBSIDIES AS A PUBLIC GOOD | 14-120 |
| 20. | பா. ஜெய்கணேஷ் | மாறனகப்பொருள் பதிப்புகளும் பாடவே... ளும் | 1-126 |
| 21. | க.வேடியப்பன் | பழங்குடியினர் வாழ்வில் விடுகதை... ...டு | -132 |
| 22. | க.சுதா & கோதண்டராமன் | திலகவதியின் புதினங்களில் ... யப் ப... ள் | 1 136 |
| 23. | அ.அருளம்மை & கோ. ஜெயஸ்ரீ | கொடியாலளம் சிறுதெய்வங்கள் ... நிலை | 1 42 |
| 24. | G. ANTO GNANA UDAYA & G. KOIL SAMUVEL | PERFORMANCE OF SPICES EXPORTS ...RING ... WTO R... ME | 143-147 |
| 25. | PARASURAMA D | UNDERSTANDING THE EFFECT OF TEC... LOGY BASED CO... RUCTIVIST TEACHING OPINION OF SECONDARY S... OL STUDENTS | 148-153 |
| 26. | S. RAJAGOPAL | TURNING POINT ... J MANEKSHAW'S ...REER IN DEFENCE SERVICE ...AFF COLLE..., WE... GTON FROM 195... 1962: A HISTORICAL EVALUATION | 154-161 |
| 27. | அ. செந்தில்... & இரா. சிவகுமா... | ...ல்வனின் ...டவே... | 162-165 |
| 28. | ஆ. தேவதா | ... இலக்க...த்தில் நாடகக் கூறுகள் | 166-169 |
| 29. | க. சோனைமுத்து & ச. இராமமூர்த்தி | ...டியரசன் க... களில் திராவிட இயக்கச் சிந்தனைகள் | 170-180 |
| 30. | பி. பாலசுப்பிரமண... | ...க்கோவை: ...ன நல மருத்துவ முன்னெடுப்பும் சில விவாதங்களும் | 181-189 |
| 31. | வே. இராஜகுரு ஆ... தூர் | ...விநாதசுவாமி கோயில் | 190-195 |
| 32. | A. K. AMPOTTI & HASSAN J & MANU | THE ... AND HISTORY OF LAKSHADWEEP - AN ANALYSIS | 196-204 |
| 33. | செ.மகேஸ்வரி & தி. சா... | தமிழர் வாழ்வும் ஆரா பழ உணவுத் திட்டமும் | 205-213 |
| 34. | இரா.சித்ரா | அச்சு வரலாற்றில் புனைக்கதை மரபு | 214-217 |
| 35. | நா.சந்திரசேகரன் | யூவல் நோவா ஹராரியின் வரலாறெழுதியல் முறை | 218-226 |
| 36. | APOORVA RAJ & KAHKASHAN KHAN | A STUDY ON THE ROLE AND IMPORTANCE OF CROSS-CULTURAL TRAINING IN EFFECTIVE MANAGEMENT OF SOPRA STERIA COMPANY LIMITED | 227-241 |
| 37. | வே. சிவரஞ்சனி | திருமாலுகந்தான் கோட்டை | 242-248 |
| 38. | SHWETA TRIPATHI & KAHKASHAN KHAN | CUSTOMER SATISFACTION : A STUDY ON MOBILE BANKING AND ITS IMPACT ON CUSTOMER SATISFACTION : A COMPARATIVE ANALYSIS OF PUBLIC AND PRIVATE SECTOR BANKS IN INDIA | 249-259 |
| 39. | ம. ரேவதி & இரா.பரிமளம் | சடங்கியல் நோக்கில் கொங்கு வேளாளர் | 260-268 |
| 40. | J.ASWINI RAJALAKSHMI & A. DEVARAJ | HISTORY OF SALT INDUSTRY IN THOOTHUKUDI DISTRICT | 269-273 |
| 41. | வை.பாலகுருநாதன் & Y. சுனிதா | பெரியபுராணத்தில் சப்தவிடங்கம் மற்றும் பஞ்ச சபை குறித்த செய்திகள் | 274-278 |
| 42. | POOJA SHREE, SHIVA A RAJA & SARABJIT SINGH | GLORIFICATION OF GYM CULTURE THROUGH SOCIAL MEDIA AND ITS EFFECT ON YOUNG WOMEN (A STUDY ON URBAN AREA OF JALANDHAR DISTRICT) | 279-287 |
| 43. | KANWAR CHANDERDEEP SINGH | SECURING ANDAMAN AND NICOBAR ISLANDS-THE NATIONAL REGISTER OF CITIZENS VERSUS INNER LINE PERMIT DEBATE | 288-298 |
| 44. | ம. முத்து மாலதி & ஐ. இந்திரா | சமணத்தில் பெண்கள் | 299-303 |
| 45. | மு. முகமது அலி ஜின்னா | சமுதாய விழிப்புணர்வில் பெண் கவிஞர்களின் பங்கு | 304-308 |
| 46. | ஜெ.காமாட்சி | பத்துப்பாட்டு நூல்களில் காணும் தமிழ் மக்களின் சமூகம் | 309-313 |
| 47. | M.R.F AFRA | சகவாழ்வு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்: இலங்கை சூழலை மையப்படுத்திய ஓர் ஆய்வு | 314-325 |
| 48. | தி.இராதா & ம.கண்ணம்மாள் | ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'கற்பெனப்படுவது' - கற்புநோக்குநிலை | 326-331 |
| 49. | த. கவிதா | கொங்குநாட்டுல் தாய்த்தெய்வ வழிபாடு | 332-341 |
| 50. | ப. ஜெயராஜ் | பதிப்பு வரலாறும் உ.வே.சா. பணியும் | 342-348 |


Published by Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed: The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph: +91 - 431-2420121

Scanned by TapScanner

# திருத்தொண்டர் காப்பியத்தில் வெளிப்படும் இயற்கை வருணனை

**கா. ஜான் கென்னடி**
முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி – 620 002, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி – 620 002, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்கள் உள்ளத்து உணர்வுகளையும், சமூகப்பற்றையும் ஒருசேர வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டன. அத்தகைய ஆற்றலை தம்முள் வெளிப்படுத்தும் தன்மையை காப்பியங்களும் தன்னகத்தே கொண்டுள்ளன. தமிழ் காப்பியங்கள், அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு உறுதிப்பொருளையும் தம்முள் கொணடும், கதைப்போக்கு சில கொண்டும் விளங்குவனவாகும். இக்காப்பியங்களில் வருணனை சிறப்பாக இடத்தைப் பெற்றுள்ளது. மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர், தோற்றம் எனப் புனைந்து நம் மனம் உணர்தல் போன்ற வர்ணனைகள் இடம்பெறுதல் அவசியமாகும் என்று தண்டியலங்காரம் விளக்குகிறது. அந்த வகையில் திருத்தொண்டர் காப்பியம் இயற்கை குறித்த வருணனைகளை தன்னகத்தே வெளிப்படுத்தி தமிழ் இலக்கிங்களுள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்பது ஆராயத்தகக்து.

**கலைச்சொல்லாக்கம்**

அளகம், கீர்த்தி, குவிமுகை

**முன்னுரை**

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
மண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர் '
(தொல்காப்பியம்: செய்யுளியல் :79)

தொல்காப்பியனார் தமிழ்ச்செய்யுள் வகையினை ஏழு வகையாகப் பாகுபடுத்துகிறார். பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் ஆகிய ஏழும் தமிழ்ச் செய்யுளின் வகைகள் என்பது புலனாகின்றது. ஆயினும் முதல் மூன்றே இவற்றுள் தகைமை சான்றுவைகளாக வழங்குகின்றன.

பாட்டினைத் தனிநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள், நாடகச்செய்யுள் என மூவகையாக உரையாசிரியர்கள் பகுப்பர். தொடர் நிலைச்செய்யுள் எனப்படுவதே காப்பியங்களாகும். ஆங்கிலத்தில் இதனை நிஉை என வழங்குவர். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்திலே குறிப்பாக மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களில் காப்பிய இலக்கணத்தின் வரையறை ஓரளவு நமக்குத் தெரிவிக்கப் பெறுகின்றது. காப்பியத்திற்குரிய சுவைகளை மெய்ப்பாட்டியலிலும் அறிந்துணர முடிகின்றது. இன்ன பொருளை சொல்லால் முந்தையோர் மரபு கண்டு கூறவேண்டும் என்று இன்ன பழைய மரபிற்கு அரண் அமைக்கும் மரபியலும் காப்பிய மரபிற்கு ஓரளவிற்குத் துணை செய்வதேயாகும்.

தமிழில் செய்யுள் இலக்கணத்தை உணர்த்தும் தமிழ் நூல்கள் மிகப்பல என அறிகிறோம். தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், அவிநயம், காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம், சங்க யாப்பு, கையனார் யாப்பு.



Scanned by TapScanner

தத்தத்தர் யாப்பு, மயேச்சுரர் யாப்பு, முதலியன யாப்பினை விளக்க எழுந்த நூல்களாகும். பிற்காலத்தே யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம், தமிழ்நெறி விளக்கம், இலக்கண விளக்கம், தொன்னூல், முத்து வீரியம் முதலியன யாப்பிற்கு இலக்கணம் வகுத்த நூல்களாகும்.

காப்பியம் என்பது காவ்யம் என்னும் வடசொல்லின் திரிசொல்வாகும். கவியாற் செய்யப்படுவது எதுவோ அது காப்பியம் என வழங்கும். பொதுவகையான செய்யுட்கள் அனைத்தும் காவியமென்று கூறத்தக்கனவாயினும் தமிழ் மொழியின் வழக்காற்றில் பொருட்டொடர் நிலைக்கே அக்காப்பியம் என்பது காவ்யம் என்னும் வடசொல்லின் திரிசொல்லாகும். கவியாற் செய்யப்படுவது எதுவோ அது காப்பியம் என வழங்கும். பொதுவகையான் செய்யுட்கள் அனைத்தும் காவியமென்று கூறத்தக்கனவாயினும், தமிழ் மொழியின் வழக்காற்றில் பொருட்டொடர் நிலைக்கே அப் பெயர் வழங்குகின்றது.

கவிஞர்கள் இயற்றும் பாடல்கள் அனைத்தும் சிறப்புக்குரியவை தான் என்றாலும், அவற்றுள் காப்பியங்கள் தனிச்சிறப்புப் பெறுகின்றன. இதனைத் தண்டியலங்கார உரையாசிரியர் மனைவியின் உரைக்கு ஒப்பாகக் காவியத்தைக் கூறுதல் வட மொழியாளர் மரபு மொழியின் சிறப்பினையும் அணிகலத்தினையும் புலப்படுத்துவது ஒரு மொழியில் அமைகின்ற காவியங்களே ஆகும்.

தமிழ் இலக்கியத்தில் இயற்கை வருணனையானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நில அமைப்பை கொண்டு பல நிலைகளில் எடுத்தாளப்பட்டுள்ளது. அகப்பாடல்களில் ஐவகை நிலங்களை வருணிக்கும்போது அந்தந்த நிலங்களுக்கேற்ப இயற்கை வளம் அமைகின்றது. புறப்பாடல்களிலும் ஐந்துநில வருணனை அமைகின்றது. ஐவகை நிலங்களைக் குறிப்பிட்டு அதனை வருணித்தல் அகத்திணைக்கே உரியதாகும். பத்துப்பாட்டுப் புறநூல்களில் ஐவகை நிலங்களைக் குறிப்பிட்டு வருணிக்கப்பட்டுள்ளன. இந்த வருணனை பிற்காலத்தில் புறத்திணையிலும் நிலம் குறிப்பிட்டு வருணிப்பதில் ஏற்பட்ட வளர்ச்சி எனலாம்.

பழங்காலம் தொட்டு இன்று வரை மனிதன் தன்னுடைய வாழ்வினை தனித்து அமைக்கவில்லை, அவன் சார்ந்த சூழலினை மையமிட்டே வாழ்வினை வாழ்ந்தான். வளம் நிறைந்த இச்சூழல் அவனுக்கு நலமும், உள்ளத்திற்கு உவகையும் அளித்தது. மனிதனைச் சுற்றி அமைகின்ற இந்தச் சூழல் இறைவனால் படைக்கப்பட்டதென்றும், இறைவனால் படைக்கப்படாமல் இயல்பான பொருட்தன்மை கொண்டும் இருக்கும் என்று இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றது. இத்தகைய சூழலியற்கை படைப்பாளர்களால் பெரும்பான்மையும் கையாளப்படுகின்றன.

பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய நான்கும் அகம் பற்றியன. இதில் ஒவ்வொரு பாட்டிலும் அந்த நிலத்திற்கேற்ப நில இயற்கை வருணனை அமைகின்றது. சான்றாக, முல்லைப்பாட்டில் கார்காலத்தின் வருகை நலம்படப் புனையப்படுகின்றது. இதில் கார்காலத்தின் தொடக்கத்தில் முல்லைநிலத்தில் மலரும் மலர்களும், இயற்கை நிகழ்ச்சிகளும் நன்கு அமைகின்றன.

முல்லை நிலம் கார்காலத்தில் கவினுற விளங்கிக் காட்சி இன்பம் வழங்குகின்றது. செறிந்த இலைகளையுடைய காயா மரம் அஞ்சனம் போன்ற நீல நிற மலர்களையும், இளந்தளிர்களைக் கொத்துக் கொத்தாக இட்டுத் தோன்றும் கொன்றை மரம் நல்ல பொற்காசு போன்ற மலர்களையும், வெண் காந்தளின் குவிந்த முகைகள் அழகிய கைகள் போன்று மலர்ந்த மலர்களையும், இதழ் நிறைந்த கான்றி குருதி போன்ற செந்நிற மலர்களையும் மலர்வித்து மணம் பரப்பி நிற்கின்றன. இப் பூக்கள் பூத்துக் குலுங்குவதால் செம்மண் பூமி பொலிவுற்றுக் காணப்படுகிறது.



Scanned by TapScanner

**செறியிலைக் காயா அஞ்சனம் மலர**
**முறியிணர்க் கொன்றை கன்பொன் காலக்**
**கோடல் குவிமுகை அங்கை அவிழத்**
**தோடார் தோன்றி குருதி பூப்பக்**
**கானம் நந்திய செங்கிலப் பெருவழி**[2]
(முல்லைப்பாட்டு, பாடல் : 93-97)

இவ்வாறு நப்பூதனார் என்னும் புலவர் முல்லை நிலத்தினை நயமுறக் காட்டுகின்றார். கார் காலத்தின் தொடக்கத்தில் இரவு முழுவதும் பெரு மழை பெய்தது. உழவர்கள் நன்கு காலைப்பொழுது புலர்ந்தவுடனே தத்தம் நிலங்களுக்குச் சென்று ஏர் பூட்டி உழுதனர். செம்மண் பூமியின் புழுதி மேலும் கீழும் சென்றிடுமாறு உழுதொழில் செய்தனர். பின்னர் வரகு விதைத்தனர் விதைகள் முளைத்து மேலே தெரிந்தன. உழவர்கள் ஓலைக்குடையைத் தம் தலைமேற் பிடித்துத் தொழிலாற்றிய தோற்றம், கலைமான் கூட்டம் நிலமெல்லாம் பரந்து திரிந்த காட்சி போலக் காணப்பட்டது.

**பேருறை தலைஇய பெரும்புலர் வைகறை**
**ஏர் இடம் படுத்த இருமறுப் பூழிப்**
**புறமாறு பெற்ற பூவல் ஈரத்து**
**ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்**
**வித்திய மருங்கின் விதைபல நாறி**
**இரலை நன் மான் இனம் பரந்தவை போல்**
**கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்**
**கறங்குபறைச் சீரின் இரங்க வாங்கிக்**
**களைகால் கழீஇய பெரும்புன வரகின்**
**கவைக்கதிர் இரும்புறம் கதூஉ உண்ட**
**குடுமி நெற்றி நெடுமாத் தோகை**
**காமர் கலவம் பரப்பி ஏமுறக்**
**கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த**
**வல்லிலைக் குருந்தின் வாங்குசினை இருந்து**
**கிளிகடி மகளிரின் விளிபடப் பயிரும்**
**கார்மன் இதுவால்**[3]
(அகநானூறு, பாடல்: 194: 1-16)

பறை முழங்க, உழவர்கள் பயிர்களில் முளைந்திருந்த களையைப் பக்குவமாகக் களைந்தெறிந்தார்கள். களைகட்ட பின் வரகு மேலும் செழித்து வளர்ந்து விட்டது. கதிர்கள் இரண்டிரண்டாகப் பிளவுபட்டாற் போன்று காட்சி வழங்கின. அக்கதிர்களை மயில்கள் உண்டு, பின் தம் நில நிறத் தோகைகளைப் பரப்பிக் குருந்த மரக்கிளைகளில் கொலுவீற்றிருந்தன. அக் கிளைகளிலிருந்து மகிழ்ச்சியோடு அவை அகவிய ஒலி, கிளி கடியும் பெண்களின் குரல் போல் இருந்தது. அத்தகைய கார்காலம் இது என்று அகநானூற்றுப் புலவர் இடைக்காடனார் அழகுற நயம்பட வருணித்துள்ளார்.

**காப்பிய அறிமுகம்**

எண்பதுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளை நடத்தியவரும் எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளவருமான சூ.இன்னாசி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயம் என்ற ஊரில், சூசை - லூர்து தம்பதியருக்கு 1934 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 13ஆம் நாள் பிறந்தவர். திருமயம், தேவகோட்டை ஆகிய ஊர்களின் பள்ளிகளில் தொடக்க மற்றும் பள்ளி இறுதிக் கல்வியையும் கற்ற இவர், இடைநிலை ஆசிரியர் பயிற்சியையும் முடித்து 1953 ஆம் ஆண்டு ஆசிரியர்பணி அதற்கு உன்னை அர்ப்பணி என்ற வகையில் தம் ஆசிரியப் பணியைத் தொடங்கினார். ஆசிரியர் பணியினையே வித்துவான், தமிழ் இளங்கலை, முதுகலை போன்ற பட்டங்களையும் பெற்றார்.

**"அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்களை உடையது பெருங்காப்பியம்"**[4] (சமூகவியல் நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.148) எனத் தண்டியலங்காரம் இயப்புகிறது. அத்தகைய உறுதிப்பொருள்களுள் சிலவற்றை உள்வாங்கி, அருளாளர் தேவசகாயம் அவர்களின் வாழ்க்கையையும் அவரது பாடுகளையும் படம்பிடித்துக் காட்டுவதே இத்திருத்தொண்டர் காப்பியம் ஆகும்.

திருத்தொண்டர் காப்பியம் நீலகண்டன் என்பவரை தலைமை கதை மாந்தராக கொண்ட காப்பியம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நட்டாலம் என்னும் ஊரில் பிறந்தவர் நீலகண்டன். நீலகண்டன் வீரர்களுக்கு ஊதியம் வழங்க அரசு



Scanned by TapScanner

அதிகாரியாக இருந்த அவர் பின்னாளில் கிறிஸ்தவராக மாறுகிறார் வடக்கே அவர்களால் தேவசகாயம் என்ற பெயருடன் பிள்ளை என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு தேவசகாயம் பிள்ளை என அழைக்கப்படுகிறார்.

இக்காப்பியத்தில் தேவசகாயம் பிள்ளை வாழ்ந்த நாஞ்சில் நாட்டு வளம் மேன்மையாக பேசப்படுகிறது குமரிநாடு ஐவகை நிலங்களையும் மேன்மைப்படுத்தும் பாங்கு காட்டப்படுகின்றன. இலக்கியங்கள் என்பதனை தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத்தின் முதன்மையானது இன்பம் உடைமை ஆகும். இலக்கிய இன்பம் என்பது வேறு பல உலகியல் இன்பங்களை போன்றதன்று அவை அனைத்திற்கும் மேலான உயர்வு பண்பாடாகும் எனக் கூறுகிறார். இலக்கிய இன்பம் என்பது உலகில் உள்ள பல்வேறு இன்பங்களை போன்று இல்லை என்பர் திறனாய்வாளர்கள். அவர்களின் கூற்று அடிப்படையில் இலக்கிய படைப்புகளை ஆராய்தல் வேண்டும் என்ற நிலையில் உலகியல் இன்பங்களைக் கடந்து இக்காப்பியம் உருவாக்கப்பட்டுள்ளது.

**"ஒரு சமூகத் தொடர்பாளருக்கு அடிப்படைத் தகுதி அவர் பயின்ற கலைகளோ, வித்தைகளோ, ஏட்டறிவோ, எழுத்தறிவோ அல்ல. மாறாக, தாம் வாழும் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள பொறுப்புணர்வே ஒருவரைத் தொடர்பாளராக்குகிறது."[5]** (அ.சிரில், பரிமாணங்கள்,ப.75) என்பர்.

எந்த ஒரு படைப்பாளி தம்மைச் சுற்றிய சமூகத்தோடு தொடர்பு கொண்டு, அதைத் தன்னகப்படுத்திக் கொள்கிறானோ அவனே தலைசிறந்தவனாகப் போற்றப்படுகிறான். அந்தவகையில் இயற்கையோடு தொடர்பு கொண்டு அதை தன்னகப்படுத்தித் தம் காப்பியத்தில் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

அழகியல் உணர்வினை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய இன்பத்தை பெற வேண்டும் வர்ணனைகள் இன்பம் சார்ந்ததாக அமைகிறது. இயற்கையின் சிறப்பை நாட்டுப்படலம் எடுத்துக்காட்டுகிறது காப்புச் செய்யுளில் நாட்டின் சிறப்பை "நான் பாட நல்லவாம் பாட்டும் பொருளும் பயனாக வீட்டில் பூட்டி உயர்த்த உண்மை தொழுவேன் யான் காட்டும் வளர்ந்த அனைத்து என்று நாட்டுச் சிறப்பு எடுத்துக்காட்டி இறைவனைத் தொழுது இயற்கையைப் போற்றிப் பாடுவேன்"[6] என்கிறார். (கு.இன்னாசி, திருத்தொண்டர் காப்பியம்) நிலத்தைத் திரு என்கிற அடைமொழி கொடுத்து போற்றுகிறார் ஆசிரியர்.

**மங்கையவள் சன்னலிடை மறைந்து நின்று**
**மனங்கவர்ந்த காதலனைப் பார்க்கும் போதே**
**அங்கமெலாம் தெரியாமல் மறைவாய் நிற்க**
**அவளுடைய முகமட்டும் தெரிதல் போல**
**பொங்குகின்ற கடலோரத் தென்னந் தோப்பில்**
**பொழுதடங்கிப் போனபின்னர் கீற்றின் ஊடே**
**மங்குவதும் ஒளிர்வதுமாய்க் காணும் காட்சி**
**மனங்குளிர வைக்கின்ற நிலவின் தோற்றம்[7]**
(திருத்., பாடல் - 92)

**வருங்காலம் போங்காலம் யாரே அறிவார்?**
**வையத்துள் எவரேதாம் கூற முயல்வார்?**
**பெருங்குளத்தில் நீர்பெருகும் பின்னர் வற்றும்**
**பெறும்வாழ்வும் அப்படித்தான் உயரும் தாழும்**
**அருங்கருத்தை மக்களுக்கே அளிக்கும் நோக்கில்**
**அழிவதுவும் வளர்வதுவும் முழுமை பெற்றும்**
**கருக்கொண்டு வளர்பிறையாய் தேயும் பிறையாய்க்**
**காட்டுகின்ற காட்சியதே நிலவின் தோற்றம்[8]**
(திருத்., பாடல் - 93)

நிலமானது மயங்கி காணப்படுகின்ற பொருள்கள் மலை முகடுகளில் விளைவாக காட்டப்படுகிறது மழை வளம் நெய்தல் கடலில் மயங்கி விழுந்து இருப்பதாக ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார் மயங்கிய தன்மையை அறிந்து நிலம் அங்கும் இங்கும் உண்டென்றாலும் அனைத்தும் ஒன்று நிகழும் இடம் நாஞ்சில் நாடு, நகர், மழை, முல்லை, நெய்தல், மருதம், பாலை என எல்லா நிலமும் ஒரே இடத்தில் பரவியுள்ளதாக நாஞ்சில்நாடு உள்ளது.



Scanned by TapScanner

காஞ்சி போல் ஒரு நாடு என்று சொல்லத்தக்க தமிழகத்தின் கடைக்கோடியில் உள்ள நாடே நாஞ்சில் நாடு ஆகும். வடக்கே உள்ள பெருநகரத்தோடு ஒப்புமைப்படுத்திபடுத்துகின்ற நிலையில் காஞ்சி நகர் தலைநகரமாக கற்களால் கட்டப்பட்ட கோவில்கள் தன்மையை மேம்படுத்தி கொண்ட நகரமாக இருக்கும் அவரை போலவே குமரி என்று போட்டுக் கொண்ட நாடு பெருமையோடு இருந்ததாக ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். கார், கூதிர், வேனில் என ஒவ்வொரு பருவத்திலும் அந்நாடு எத்தகைய தன்மையுடையதாய் விளங்குகிறது என்பதையும் தம் காப்பியம் வழி கீழ்க்காணுமாறு ஆசிரியர் விளக்குகிறார்.

**கார்காலம் என்பதனை அறிவித் தாற்போல்**
**காடெல்லாம் முல்லைமலர் பரவிக் காணக்**
**கார்கால மழைமேகம் கதிர்ம றைக்கக்**
**கவின்முல்லை வெண்மைக்கே நாணம் கொண்டு**
**பார்செழிக்க ஒளிதன்னைத் தந்து வந்த**
**பகலவன்தான் ஓடிவிட்டான் என்றே ஆயர்**
**மோர்விற்கப் போகுங்கால் கூறு மாறு**
**மோனநிலை பெற்றதிவ்வூர் கார்கா லத்தால்**[9]
(திருத்., பாடல் - 92)

**இளவேனில் காலந்தான் என்றால் இங்கே**
**இளந்தென்றல் காற்றலவோ வீசும் தோழி!**
**அளகத்தின் அரும்பதுவும் மலர வில்லை**
**அருகினிலே வாடியது வீழ்தல் கண்டேன்**
**வளமில்லாக் காரணத்தால் முதுவே னில்தான்**
**வந்துவெப்பம் தந்திடுதோ என்று கேட்கக்**
**களங்கண்ட தலைவனினும் திரும்பா ஏக்கக்**
**காதலினால் நீவிட்ட மூச்சே என்றாள்** [10]
(திருத்., பாடல் - 120)

சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த பெண்களின் நிலை இடைக்காலத்தில் அதாவது களப்பிரர் காலத்திலும், பின் பல்லவர் காலத்திலும் தாழ்ந்து போனது. பெண்களின் காதல் போற்றப்பட்டது. விருந்தோம்புதல், கொடையளித்தல் ஆகிய அனைத்து உரிமைகளையும் பெண்கள் சங்ககாலத்தில் பெற்றிருந்தனர். கல்வியில் சிறந்திருந்தனர். கலைஞானம் மிக்கவர்களாயிருந்தனர். புலவர்களாய் திகழ்ந்திருந்தனர். இருப்பினும் சங்க காலத்தில் கற்பு பெண்ணுக்கே வற்புறுத்தப் பட்டது. ஆண்கள் பரத்தையரை நாடினர். பரத்தமையைச் சமூகம் ஏற்றிருந்தது. பெண்கள் சகித்திருந்தனர் போன்ற பெண்ணடிமைத் தனம் அன்றே இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

**வெய்யை போன்று முயங்குத முன்னே எழுத்**
**ஒலியில் கூந்தல் நலம்பெற் புனைந்த**
**முகை அவிழ் கூந்தல் வாட்டிய**
**பகைவன்மன் யான் மறந்து அலைகலனே**[11]
(நற்றிணை, பாடல்: 260)

தலைவா! என்மேல் விருப்பமுடையவன் போல் என்னை தழுவுகின்றாய்! ஆனால் முன்பு பரத்தையை நாடி என் மாலையை வாடச் செய்தவனும் நீ என்பதை மறந்திலேன்... என்ற தலைவியின் கூற்று நோக்கத்தக்கது.

அணிசேர் உவமைகளும் கடல்நேர் காட்சிதரும், தடாகத்தின் நீர்ப் பரப்பு, நிலத்தில் இறங்கிய கிழங்கினின்றும் வளர்ந்து வரும் கரும்பினைக் கண்டாற் போன்று திரண்ட தாமரையின் தண்டு, யானையின் காது போன்ற பசிய தாமரை இலைகள், கழுமரம் உயர்ந்து நிற்பது போல் தோன்றுகின்ற தாமரை மொட்டு. இடையிடையே முறுவல் பூத்த முகம்போன்று நிற்கும் தாமரை மலர்கள் இவற்றின் எழில் நிறைந்த பழனத்தை.

**கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்**
**நிலம்பல வீழ்ந்து வேர்முதிர் கிழங்கின்**
**களைகண் டன்ன தூம்புடைத் திண்கால்**
**களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கில்**
**பாடல் வழியே**
**கழுநிவந் தன்ன கொழுமுகை இடையிடை**
**முறுவல் முகத்தில் பல்மலர் தயங்கப்**
**பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து**[12]
(அகநானூறு, பாடல்: 260)

என்னும் அகநானூற்றுப் பாடல் வழி கண்டு அறியமுடிகிறது. ஒரு தாமரைக் குளத்தின் தாமரையைக் கருப் பொருளாக்கி ஒரே பாடலில்



Scanned by TapScanner

ஐந்து உவமைகளைத் தந்து இலக்கிய இன்பம் இணைக்கிறது அகப்பாடல்.

**ஓரிதழ் குழந்தைக்கன்னம், ஓரிதழ் விழியை ஒக்கும்,**
**ஓரிதழ் தன்மணாளன் உருவினைக் கண்டு கண்டு**
**பூரிக்கும் உதடு மற்றும் ஓரிதழ் பொல்லார் நெஞ்சம்,**
**வாரித்தரச்சி வந்த உள்ளங் கையாம்மற் றொன்று** [13] (அழகின் சிரிப்பு, ப.28)

கற்பனைக்கு எட்டாத அற்புதங்களை செந்தாமரைப்பூவின் வழியே சுவைஞனுக்கு வழங்குகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

இயற்கை அழகில் ஈடுபாடு கொள்ளாத கவிஞர்களே இல்லை எனலாம். பாடல்களிலும் இயற்கை அழகு மேம்பாடு இருப்பதைக் காணலாம் நெல் எல்லாம் செம்பொன் நாம் நேரத்தைக் காட்டும் வெற்றி வரை வளைந்து நிற்கும் புல் எல்லாம் மரகதமணி பசுமை பொருத்தும் புவி குளிரும் பூ மலரும் புதுமை காட்டும் கல்லெல்லாம் மாணிக்க கற்கள் ஆகும் என்று இயற்கைப் பொருள்கள் மேன்மையாகக் காட்டப்படுகின்றது.

இயற்கை ஆற்றல் படைத்தது. அழகை வெளிப்படுத்த காட்டில் இயற்கையின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது மனிதப்பண்பு இயற்கையின் ஆற்றல் புயலாக வெள்ளமாக பூகம்பமாக வெளிப்படும்போது மனிதனும் மனிதனின் அறிவியல் ஆக்கங்களும் எதிர் நிற்பதில்லை என்ற அறிஞர் பஞ்சாங்கத்தின் கூற்று உண்மையாகிறது.

மண். மனிதன் என்ற இரண்டு துருவங்களுக்கு இடையே ஏதோ ஒன்று. இணைப்புப் புள்ளியாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இவ்விரண்டுக்கும் இடையேயான தொடர்பு நேரிடையாக அல்லது மறைமுகமாக இருக்கும் ஒன்று. மனிதனுக்கும் நிலத்திற்குமான இருப்பு என்பது ஒன்றல்ல. ஆனாலும் இந்தத் தொடர்பு தொடர் இயக்கமாக. விளக்கப்படும் அடையாளமாக, பெருமைக்குரிய கட்டுமானமாக இருந்து வருகிறது. நிலம் மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்கிறதா? அல்லது மனிதன் நிலத்தினைப் பயன்படுத்தி தனது தேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறானா? இரண்டும் ஒன்றுதானே என்று தோன்றும்.

ஆனால் இவ்விரண்டுக்குமான இடைவெளி அல்லது தொடர்பற்ற நிலை என்பது நிச்சயமான ஒன்று. மனித வாழ்வின் அடிப்படைத் தேவையான உணவின் உற்பத்தித் தொழிற்சாலையாக மட்டும் நிலம் இருப்பதில்லை. அந்த உற்பத்தி மூலமாகத் தான் ஒரு மனிதசமூகத்தின் வாழ்வு முறைகள் கட்டமைக்கப்படுகின்றன. நிலம் என்பது நிலையானப் பருப்பொருள். இதில் தற்செயலான மாற்றங்கள் என்பது மனிதன் அதன் மீது செலுத்தும் உழைப்பு என்பதாகும். உழைப்பைச் செலுத்துவதன் மூலமாகத் தன் தேவைகளை மனிதன் அடைகிறான்.

இது நிலத்தை தன்வசப்படுத்தும் முயற்சியல்ல. மனிதசமூகம் பல்வேறு விதமாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் தீவிர ஈடுபாடு கொண்டுள்ளது. இந்த ஈடுபாடு இன்று நேற்று அல்ல. பன்னெடுங்காலத் தொடர் வரலாறாக இருந்து வந்துள்ளது. அதாவது இடம். நிறம் போன்ற தன்மைகளில் பெரும்பாலும் அடையாளப்படுத்த முயல்கின்றனர். முக்கியமாகத் தொழிலால் முதன்மைப்படுத்தப்படுவதே நமது பாரம்பரியமாகும். ஒன்றிணைந்த தொழில் நுட்பங்களின் மூலமாக ஒரு இனம், சமூகம் அடையாளப்படுத்தப்படுகிறது.

மழையினை வானம் பூமிக்கு அளிக்கும் அமிழ்தம் எனலாம். மழை பெய்யாவிடின் உலகில் உள்ள உயிரினங்கள் உயிர் வாழ முடியாது. இதனை வள்ளுவர்.

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது**[14]
(திருக்குறள், வான்சிறப்பு 16)

எனக் கூறுவதன் வழி அறிய முடிகின்றது.

பொத்தலான நீர்ப்பானை யாகித்
தன்னிடம் இருந்த
தண்ணீர் அனைத்தையும் கொட்டிக்
கொண்டிருந்தது
குமுறிய வானம்!

என்று வானத்திலிருந்து மழை பெய்யும் அழகினை கற்பனையோடு கவிஞர் பொன்னடியான், பாடியுள்ளதன் வழி அறிய முடிகின்றது.

இயற்கையின் விளக்கமாகத் தொல்காப்பியம் கூறும் **இயற்கைய பொருளை இற்றெனக் கிளத்தல்** என்ற நூற்பாவிற்குப் பொருள் கூறும் சேனாவரையர், இயற்கைப் பொருள் என்பதற்குத் தன்னியல் திரியாது நின்ற பொருள் என்று கூறித் தன்னியல் திரியாதனவாக நிலம், நீர் நெருப்பு, காற்று என்பனவற்றைச் சான்றாகக் காட்டுவார். மனிதனின் தோற்றம் இயற்கை. இயற்கை என்பது மனிதனைச் சூழ்ந்துள்ள சூழலாகும். அது மனிதனுக்கு பல்வகை இன்பத்தைத் தருகிறது எனலாம்.

இயற்கை தரும் இன்பத்தில் இதயத்தைப் பறிகொடுக்கும் இயல்புடையவன் கவிஞன். பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை புலவர்களால் பெரிதும் பாடப்பெற்றுள்ளது. திருமுறைகளில் ஞானசம்பந்தரின் திருப்பாடல்களில் இயற்கை அழகோவியமாக அமைகின்றது. கம்பனிடம் இயற்கை பேராட்சி செய்கின்றது. சிற்றிலக்கியங்களிலும் இயற்கைப் புனைவு காணப்படுகின்றது. அனைத்துக் காலக்கட்டத்திலும் கவிஞன் இயற்கையால் ஈர்க்கப்பட்டவனாகவே இருக்கின்றான் எனக் கருதலாம்.

**பயிர்செழிக்கும் என்ப துண்மை**
**மண்வளமும் தூயவனால் சிறந்த துண்மை**
**மண்வளத்தால் மரம்வளரும் என்ப துண்மை**
**மரவளமும் தூயவனால் சிறந்த துண்மை**
**எண்ணுகின்ற செயலெல்லாம் நிறைவைக் கண்டே**
**எண்ணியவா றெய்துதற்குத் துணையாய் ஆகும்**
**மண்ணதனில் இம்மண்ணே சிறந்த தென்றால்**
**மண்ணுக்கே அருள்தந்த தூயன் இவனே**[15]
(திருத்., பாடல் - 120)

கோடையிலும் பிறர் உதவி வேண்டத்தக்க கைகாட்டும் ஓலை விசிறி என்று கூறி, மின்விசிறி இல்லாத காலம் கடந்த காலம் அதனைப் போக்க ஓலை விசிறியை மக்கள் என்பதைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

தலைவனும் தலைவியும் களவு மேற்கொண்ட பொழிலுறு காட்சிகளை விரித்துரைக்கும் பகுதியான பொழிலுறு படலத்துள் பொழிலின் தோற்றம், காதலின் இன்பம், தலைவிநிலை, தோழி தூது, தலைவியின் நலம் புனைந்துரைத்தல், ஊடல் கூடல் மொழிகள் இடம் பெற்றுள்ளன. பிறரறியாத களவு வாழ்க்கையில் பொழிலின் கண் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் புகழ்மொழியால் பலபாராட்டி மகிழ்ந்து இன்பம் நுகர்வது பொழிலுறு படலமாக அமைந்துள்ளது. இப்பாடல்கள் அனைத்தும் இன்பச்சுவை பயக்குமாறு அமைந்துள்ளன. பொழிலின் அழகுத் தோற்றத்தினை,

**நெல்லழகும் நீரழகும் வாழை கரும்பு**
**நெருங்கியுள்ள பேரழகும் பாயில் அழகும்**
**சொல்தவமும் சிறியழகும் மானின் அழகும்**
**சோலையுள மயிலழகும் சோர்வைப் போக்கும்**
**தொல்லியற்கை மலையழகும் சுனையின் அழகும்**
**தொங்குகின்ற நீரருவி அழகும் முனிவர்**
**இல்லழகும் புள்ளழகும் மட்டும் அன்றி**
**இங்கில்லா அழகெங்கும் இல்லை என்பார்"**
(திருத்., பாடல் - 245)

என்று ஆசிரியர் பொழிலின் அழகினை நயம் பட எடுத்துரைக்கிறார். தலைவன் ஆண் யானையினை தாக்கும் உரம் பெற்றிருந்தாலும், தலைவியை நினைப்பதில் தளர்ந்துப் போகின்றான். மாவீரனாய் இருந்தாலுமத் மனத்தினை தலைவியிடத்தே விட்டுவிட்டதால் குலைவாழைத் தண்டென பதுமையாகின்றான்.

மங்கையரை பூமியாகப் பார்க்கிறார் ஆசிரியர். மறைந்து நின்றிருந்த காதலனைப் பார்க்கும்போதே அங்கமெல்லாம் தெரியாமல் மறைவாய் அவருடைய முகம் மட்டும் தெரிந்தது போல என்று நிலவு பெண்ணவள் பெண்ணானவள் அந்தி மாலை நேரம் கடந்து சென்றபோது பூமியைப் பார்க்கிறாள் கடலோரம் பசுமைச்சாயம் போர்த்தியது போல்



Scanned by TapScanner

தென்னை மரங்கள் உள்ளன அந்த கீர்த்திகளை இடுக்குகளில் காதலனும், காதலியும் பேசிக் கொள்வதாகப் பாடல் அமைத்துள்ளார் ஆசிரியர்.

**தலைவனவன் களிற்றினையே தாக்கு வன்றான்**
**தலைவியின் நினைவதனால் தளர்ந்தும் போனான்**
**மலையசைக்கும் மாவீரன் தாளென் றாலும்**
**மனமுழுவதும் அவளிடத்தே விட்டு விட்டுக்**
**குலைவாழைக் தண்டெனவே பதுமை யானான்**
**கூடுகின்ற நான் நினைத்துத் துவண்டு போனான்**
**கலைகற்றும் கலை இழந்தான் கவலை யாலே**
**காரிகையின் நினைவகற்ற இயலான் ஆனான்** (திருத்., பாடல் - 451)

என்று தலைவன் நிலையினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

சூரியனின் வெப்பம் மாறி கடும் குளிர் உடனடியாக வந்தது என நிலவின் ஒளி குளிர்ச்சியாக போற்றப்படுகிறது. அதனை, கடன் வாங்கி கடன் கொடுத்தார் என்பார் கடன் வாங்கி கொடுத்து மகிழ்வது உண்டு கடன் என்றால் வெப்பம் குறையும் என்றால் கடுப்பாகும் குளிர்ச்சியூட்டும் கதிரோன் வந்த சுடரோலி தான் வெப்பத்தை கடனாய் வாங்கி சுகமளிக்கும் குளிர்ச்சியைத் தந்து என சூரியனின் வெப்பத்தை கடனை நிறைவு பெற்றது. குளிர்ச்சியான ஒளியாக தருவது வெளிப்படையாக உணர்த்துகிறார் ஆசிரியர்.

திருத்தொண்டர் காப்பியத்தை 2006 ஆம் வெளிக்கொணர்ந்த ஆசிரியர், 2004 ஆம் ஆண்டு பேரழிவை உண்டாக்கிய சுனாமி ஆழிப்பேரலையை மேற்கோளிட்டுள்ளார். வளர்த்தவளே அழித்த கதை எங்கே உண்டு வாழும் சுனாமியால் கடலை கொள்ளும் என்று காட்டுகிறார். அவள் தன் குழந்தைகளைக் கொன்று தீர்த்தாள் இயற்கை என்றும் தன் நிலையிலிருந்து மாறாது என்பது புலனாகிறது.

தொகுப்புரை

- மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர், தோற்றம் எனப் புனைந்து நம் மனம் உணர்தல் போன்ற வர்ணனைகள் இடம்பெறுதல் அவசியம் என்று கூறுகிறது. அந்த வகையில் திருத்தொண்டர் காப்பியம் இயற்கையைச் சிறப்பாக உணர்த்துகின்றது.
- சூரியன், நிலவு, பூமி என எண்ணற்ற உருவகங்கள் இக்காப்பியத்தில் மேற்கோள் காட்டப்பட்டு, கருத்துப் புலப்படுத்தப்படுகிறது.
- திருத்தொண்டர் காப்பியத்தை 2006 ஆம் வெளிக் கொணர்ந்த ஆசிரியர், 2004 ஆம் ஆண்டு பேரழிவை உண்டாக்கிய சுனாமி ஆழிப்பேரலையை மேற்கோளிட்டுள்ளார்.
- திணைமயக்கம் தோன்றும் எல்லா நிலைகளையும் காப்பியப் பாடல்களிலே அடையாளம் காணமுடிகிறது.

**துணை நின்றவை**


1. இன்னாசி, திருத்தொண்டர் காப்பியம், காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், சென்னை 24, முதல் பதிப்பு 2007
2. அ.சிறில், பரிமாணங்கள், வைகறை பதிப்கம், திண்டுக்கல், முதல்பதிப்பு 1996
3. சுதந்திரமுத்து, படிமம், இளவழகன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2001
4. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, மறுபதிப்பு 2005


☙



Scanned by TapScanner